Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.835/2025

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. கருப்பசாமி | Occupation | தலைமை காவலர் |
| Father's name | முனியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of June 2026.

15.06.2026

1ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி–**

நான் B.Sc.Computer Science படித்துள்ளேன். எனக்கு கம்ப்யூட்டர் சம்மந்தமான வேலைகள் நன்றாக தெரியும். நான் 100 வழக்குகளுக்கு மேலாக இதுபோல் சிசிடிவி கேமரா பதிவுகளை வழக்கு விசாரணைக்காக எடுத்து கொடுத்துள்ளேன். **மேற்படி Pendrive சாபொ.III ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி Pendrive ல் உள்ள வீடியோ சம்மந்தமாக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.65B ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வகைகளின்படி Part–B படிவம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதில் **Hash Value குறிப்பிடப்படாததால் ஆட்சேபணையுடன் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி பெட்ரோல் பல்க்கில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் பெட்ரோல் பல்க்கில் உள்ளவர்கள்தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கண்காணிப்பு கேமரா காட்சிகளை சார்பு ஆய்வாளர் எடுத்து வந்த Pendrive வில் நான் பதிவிறக்கம் செய்தேன். மேற்படி Pendrive வை அடையாளக்குறியீடுகள் எதுவும்

செய்தேனா என்றால் இல்லை. NVR ஐ கைப்பற்றி இந்நீதிமன்றத்திற்கு அனுப்பினோ என்றால் இல்லை. மேற்படி சார்பு ஆய்வாளர் கொடுத்த Pendrive வில் ஏதேனும் பதிவுகள் இருந்ததா என்றால் இல்லை. மேற்படி பதிவுகளை நான் பதிவிறக்கம் செய்யும்போது அதன் சாட்சியங்களை களைத்திருக்க வாய்ப்பு உள்ளது என்றால் இல்லை. அன்றைய தேதியில் மேற்படி நிறுவனத்திலிருந்து 65B சான்றிதழை வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 65B சான்றிதழை இன்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கண்காணிப்பு கேமரா காட்சிகளை தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினோமா என்றால் இல்லை. மேற்படி கண்காணிப்பு கேமரா காட்சிகளை Anthropology துறைக்கு அனுப்பினோமா என்றால் இல்லை. மேற்படி பதிவுகளை பதிவிறக்கம் செய்வதற்கு நான் அதிகாரம் படைத்தவர் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.